பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை - 4

**08 01 2026** **7 15**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டில் சீர்திருத்தம் தொடர்ந்து விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. இந்திய பாரம்பரியம் மாண்புகள், சேவை மற்றும் ஒழுக்கம் சார்ந்த தலைமைத்துவத்தை வலியுறுத்துவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. வேளாண் கழிவுகள் மூலம் குறைந்த செலவில் தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. அமெரிக்காவில் கல்வி பயில மாணவர் விசா பெற்றவர்கள் அந்நாட்டு விதிகளை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் எச்சரித்துள்ளது.

5. பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வல் தேவ் - நிதின் குமார் சின்ஹா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டில் சீர்திருத்தம் தொடர்ந்து விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதை அடுத்து, சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள அவர், தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் விரிவான முதலீடு மற்றும் தேவை அடிப்படையிலான கொள்கைகளால் இந்த வளர்ச்சி சாத்தியமாகி உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

உள்கட்டமைப்பு, உற்பத்திக்கான ஊக்கத்தொகைகள், மின்னணுப் பொருட்கள், எளிதாக வர்த்தகம் செய்தல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் செழுமையான இந்தியா என்ற கனவை நனவாக்க அரசு பணியாற்றி வருவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7 புள்ளி 4 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டில் இது 6 புள்ளி 5 சதவீத வளர்ச்சியைக் கண்டிருந்தது.

நடப்பு நிதியாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் முதலாவது முன்கூட்டிய மதிப்பீட்டின்படி 201 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் இது இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இது கடந்த நிதியாண்டில் 187 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.

<<<<>>>>

இந்திய பாரம்பரியம் மாண்புகள், சேவை மற்றும் ஒழுக்கம் சார்ந்த தலைமைத்துவத்தை வலியுறுத்துவதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சுவாமி பிரபு பாதாவின் வாழ்க்கை வரலாறு குறித்த புத்தகத்தை வெளியிட்டுப் பேசி அவர், அவருடைய போதனைகள் தற்போதைய விரைவான உலக நடவடிக்கைக்கு மிகவும் அவசியம் என்று தெரிவித்தார்.

பிரபு பாதா ஏற்படுத்திய அமைப்புகள் பல ஆண்டுகளாக சமூகத்திற்கு சேவை செய்து வருவதாக சுட்டிக்காட்டினார்.

அவருடைய பணிகள் உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்களை சென்றடைந்துள்ளதாக குடியரசு துணைத்தலைவர் தெரிவித்தார்.

<<<<>>>>

வேளாண் கழிவுகள் மூலம் குறைந்த செலவில் தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுவதாக மத்திய அறிவியல்

தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய அவர், எஃகு கசடுகள், பிளாஸ்டிக் கழிவுகள், உயிரி எரிபொருள் போன்ற பொருட்களைப் பயன்படுத்தி அமைக்கப்படும் நெடுஞ்சாலைகள் தரம் மிக்கதாக உள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்த சாலைகள் சுற்றுச்சூழல் மாசுபாட்டை பெருமளவில் குறைக்க உதவும் என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தேசிய ஜவுளித்துறை அமைச்சர்கள் மாநாடு அசாம் மாநிலம் குவஹாத்தியில் இன்று தொடங்குகிறது.

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங், அசாம் முதலமைச்சர் டாக்டர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா உள்ளிட்டோர் இதில் கலந்துகொள்கின்றனர்.

இரண்டு நாட்கள் நடைபெற உள்ள இம்மாநாட்டில் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த ஜவுளித்துறை அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகள் பங்கேற்க உள்ளனர்.

ஜவுளித்துறையில் கொள்கை, முதலீடு, நிலைத்தன்மை, ஏற்றுமதிகள், உள்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு ஆகிவற்றுக்கான வாய்ப்பை ஏற்படுத்துவது இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

2030ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை உலகளாவிய ஜவுளி உற்பத்தி மையமாக திகழச் செய்ய வேண்டும் என்ற மத்திய அரசின் தொலைநோக்கு பார்வைக்கேற்ப இம்மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் ஜவுளித்துறையின் வலிமை, புதுமைக் கண்டுபிடிப்புகள் மற்றும் வளமையான பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் கண்காட்சி மற்றும் அரங்குகள் இடம்பெற உள்ளன.

<<<<>>>>

இந்தியாவின் பழமையான கூட்டாண்மை நாடுகளில் ஒன்றாக பிரான்ஸ் திகழ்கிறது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

பாரீசில் பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் திரு. **Jean Neol Barrot**ஐ அவர் சந்தித்துப் பேசினார்.

நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்ப்பதில் தொடர்ச்சியான உரையாடல் முக்கியமானது என்று கூறினார்.

<<<<>>>>

விவசாயிகளுக்கு தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள பூச்சிக்கொல்லி மேலாண்மை வரைவு மசோதா குறித்த கருத்துகளை பொதுமக்கள் தெரிவிக்கலாம் என்று மத்திய வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

இம்மசோதா வர்த்தகம் செய்வதை எளிதாக்குவதற்கு வகை செய்கிறது.

தற்போதைய தேவையின் அடிப்படையில் விவசாயிகளுக்கு சிறந்த சேவைகளை அளிக்கவும், வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும் உதவுகிறது.

வேளாண் நடைமுறை சார்ந்த திட்டங்களை முறைப்படுத்தவும், தொழில்நுட்பம் சார்ந்த நடைமுறைகளை பயன்பாட்டுக்கு கொண்டுவரவும் இந்த மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது.

போலி பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனை செய்யப்படுவதை தடுக்க கடும் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட சீர்திருத்த நடவடிக்கைகளை இது உள்ளடக்கியுள்ளது.

பூச்சிக்கொல்லிகள் தொடர்பான கட்டாய ஆய்வக சோதனைகளுக்கு அங்கீகாரம் அளிப்பது குறித்தும் இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைவு மசோதா குறித்த கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை அடுத்த மாதம் 4ஆம் தேதிக்குள் தெரிவிக்குமாறு வேளாண் அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

அமெரிக்காவில் கல்வி பயில மாணவர் விசா பெற்றவர்கள் அந்நாட்டு விதிகளை மீறினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் எச்சரித்துள்ளது.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அமெரிக்க தூதரகம், சட்ட விதிகளை மீறினாலோ அல்லது மாணவர்கள் கைது செய்யப்பட்டாலோ அவர்களது விசா ரத்து செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று கூறியுள்ளது.

எதிர்காலத்தில் அந்த விசாவை அவர்கள் பெறுவதற்கு தகுதியற்றவர்கள் என்றும் தெரிவித்துள்ளது.

அமெரிக்க விசா என்பது சலுகை என்றும், அது உரிமையாக கொள்ளக்கூடாது என்றும் அமெரிக்க தூதரகம் கூறியுள்ளது.

<<<<>>>>

டென்மார்க் மற்றும் கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்றக்கூடும் என்று கூறப்படும் நிலையில் அந்நாடுகளுக்கு ஸ்பெயின் மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள ஸ்பெயின் பிரதமர் திரு. **Pedro Sanchez,** டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து மக்களுக்கு ஆதரவாக ஸ்பெயினுடன் இணைந்து ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, போலந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய அமைதிக்கு நாட்டின் இறையாண்மையை மதிப்பது அவசியம் என்றும் ஸ்பெயின் பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

மற்ற நாடுகளின் சட்ட விதிகளின்படி பதிவு செய்யப்பட்ட கப்பல்களுக்கு எதிராக எந்தவொரு நாடும் ராணுவ நடவடிக்கை

மேற்கொள்வதற்கான உரிமை கிடையாது என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவுக்கு சொந்தமான எண்ணெய்க் கப்பலை வடக்கு அட்லாண்டிக் பகுதியில் அமெரிக்க ராணுவம் கைப்பற்றிய நிலையில், ரஷ்ய போக்குவரத்து அமைச்சகம் இவ்வாறு கூறியுள்ளது.

தங்கள் நாட்டு கப்பல் குறிப்பிட்ட கடல் வழியே செல்வதற்கு தற்காலிக அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது.

இதற்கிடையே கரீபியன் கடல் பகுதியில் வெனிசுலாவுக்கு சொந்தமான கப்பலையும் அமெரிக்கப் படையினர் சிறைபிடித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

வெனிசுலா தொடர்பான பிரச்சினைகளுக்கு இந்தியா பேச்சுகள் மற்றும் தூதரக ரீதியில் தீர்வு காண முயற்சிப்பதாக இந்தியாவுக்கன கியூபா தூதர் திரு. **Juan Carlos Marsan** தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராணுவ நடவடிக்கையின்றி அமைதியான தீர்வு மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அனைவரும் விரும்புவதாக கூறினார்.

சர்வதேச அளவில் நிலவும் முக்கிய அரசியல் முடிவுகளில் இந்தியா பெரும் பங்கு வகிப்பதாக கியூபா தூதர் தெரிவித்தார்.

<<<<>>>>

பெங்களூரு ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வல் தேவ் - நிதின் குமார் சின்ஹா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்த இணை **6-2, 7-5** என்ற செட் கணக்கில் பெல்ஜியமின் மைக்கேல் கீர்ட்ஸ் - ஜப்பானின் செய்ரா வட்டனாபே இணையை வென்றது.

மற்றொரு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் கலியந்தா பூனச்சா - தாய்லாந்தின் **Pruchya Isaro** இணையும், இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - ஆஸ்திரியாவின் **Neir** இணையும் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

சென்னை ஓபன் செஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹித் கிருஷ்ணா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

**8**வது சுற்று முடிவில் அவர் **7** புள்ளிகள் பெற்றுள்ளார்.

மற்றொரு இந்திய வீரர் ஸ்ரீஹரி ஆறரை புள்ளிகளுடன் மூன்றாது இடத்தில் உள்ளார்.

---------------

தேசிய சீனியர் வாலிபால் போட்டியின் ஆடவர் பிரிவில் தமிழக அணி **25-21, 25-21, 25-17** என்ற செட் கணக்கில் சர்வீசஸ் அணியை வென்றது.

**<<<<The End>>>>**